Kanton Zürich
Bildungsdirektion
**Volksschulamt**
Pädagogisches, Unterrichtsfragen

Kontakt: Verena Regula Ungricht, lic. phil. I, wiss. Mitarbeiterin, Walchestrasse 21, 8090 Zürich
Telefon 043 259 22 42, verena-regula.ungricht@vsa.zh.ch

15. November 2018


**Tamilisch**_தமிழ்

# பாலர்பாடசாலை பற்றிய பெற்றோரிற்கான தகவல்கள்

உங்கள் பிள்ளை பாலர் வகுப்பு செல்ல ஆரம்பிக்கும்போதே கட்டாயக்கல்விக்குரிய கல்விப்பாதை ஆரம்பமாகின்றது. இந்த முதல்கட்டத்தில் பிள்ளைகளிற்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு ஊக்குவிகப்படுவதுடன் முதலாம் வகுப்பிற்கு செல்வதற்கு வழிகாட்டவும் படுகின்றது. இப்பிரசுரத்தில் பாலர்வகுப்பிற்குரிய குறிக்கோள்கள், பாடங்கள் மற்றும் விதிமுறைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

### பாலர்வகுப்பின் குறிக்கோள்கள்

பாலர் வகுப்பு தொடங்குவதிலிருந்து மாணவ மாணவியர் பெற்றோர் பாதுகாவலரிடமிருந்து தினமும் சில மணித்தியாலங்கள் பிரிந்திருப்பர். இதனூடாக சிறுவர்கள் புதிய வாழ்க்கை மற்றும் விளையாட்டு அனுவபங்களை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கப்படுகின்றது.

அறிவு, திறமை, வளர்ச்சிநிலை மற்றும் மொழியறிவு என்பன பாலர்பாடசாலை ஆரம்பிக்கையில் வெவ்வேறாக இருக்கும். தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் மாணவ மாணவியரின் கற்றலை தைரியமூட்டல் மற்றும் ஊக்குவித்தல் என்பன குறிக்கோளாகும். ஒவ்வொரு பிள்ளையும் தங்களுடைய திறைமை-களை சிறந்தமுறையில் விரிவாக்கமுடியும்.

### பாலர் பாடசாலையில் „கற்றல்“ என்றால் பொருள் என்ன

பாலர் வகுப்பு, ஆரம்பப்பிரிவு மற்றும் மேற்பிரிவு என்பன ஒரேமாதிரியான-சூரிச்பாடத்திட்டம் 21-எனும் பாடத்திட்டத்தில் அடங்கும். இப்பாடத்திட்டத்தில் பாலர் வகுப்பில் எவ்வகையான அடிப்படைத்தகமைகள் வளர்க்கப்படவுள்ளது என்பது வரையறுக்கப்பட்டுள்ளது. இதனூடாக வளர்ச்சி மற்றும் பிள்ளையின் கற்றல் பற்றியும் புதிய தகவல்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

பாடத்தில் விளையாட்டானது மிக முக்கியமானதுடன் விசேட பங்கும் வகிக்கின்றது. பிள்ளைகள் விளையாடுவதனூடாக அவர்கள் கற்க வழிவகுக்கப்படுகின்றது. சிறுபிள்ளைகள் அவதானித்தல், பிறர்போன்று பேசி பாவனை செய்தல், இணைந்து வேலை செய்தல், வடிவமைத்தல் மற்றும் உரையாடல் போன்றவை மூலமாக கற்கின்றனர். அவர்கள் இவ்வாறு தமது சொந்த திறமைகளை செய்துபார்க்கவும் மேம்படுத்தவும் முடிவதால் அவர்கள் மகிழ்வடைகின்றனர். பிள்ளைகளிற்கு விளையாட்டும் கற்றலும் சிறந்த கட்டமைப்பை உருவாக்குகின்றன. முதல் மூன்று தொடக்கம் நான்கு பாடசாலை வருட காலப்பகுதியில் சிந்தித்தலிலும் கற்றலிலும் மாற்றம் உருவாகின்றது. இதனால் பாடம் அல்லாத செயற்பாடுகளிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற அறிவினூடாக தமது கவனத்தை கல்வி உள்ளடக்கத்தில் செலுத்த முடிவதுடன் முறையாக கற்கவும் முடிகின்றது. இவ்வாறு அவர்கள் கற்பதன்மூலம் கற்றலுக்குள் இயல்பாக நகர்த்தப்படுகின்றனர்: உதாரணமாக மொழி, கணிதம் அல்லது வடிவமைத்தல் போன்ற பாடங்கள்.

பாலர்பாடசாலையில் கற்பித்தல் மொழி சுவிஸ் ஜேர்மன் (சுவிஸ் டொச்) ஆகும். உயர் ஜேர்மன் (ஹோஹ் டொச்) மொழியானது சில குறிக்கபட்ட சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும்.

**பாலர்பாடசாலையில் அவதானித்தலும் மதிப்பிடுதலும்**

மாணவ மாணவியர் ஒட்டுமொத்த மதிப்பீட்டடிப்படையிலேயே மதிப்பிடப்படுவர். பொதுவாக சூரிச்பாடத்திட்டம் 21 பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அடிப்படைத்தகமைகளின் அடிப்படையிலாகும். பாலர்வகுப்பு ஆசிரியர்கள் பிள்ளையின் வளர்ச்சிமட்டம், அறிவு, பிள்ளையால் என்ன செய்யமுடிகின்றது மற்றும் அவர்களின் ஆர்வம் போன்றவற்றை அவதானித்து மதிப்பிடுவர். இவ் அவதானிப்புகளையும் மதிப்பீடுகளையும் வைத்துக்கொண்டே முன்னேற்ற இலக்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அதாவது கல்விக்கோட்பாட்டு முடிவுகள், துறைசார் நிபுணர்கள் (பேச்சுப்பயிற்சி, ஊனமுற்ற அல்லது விவேகம் குறைந்தவர்களுக்கான சிறப்புக்கல்வியாசிரியர்) (லோகோபெடி, ஹைல்பெடகோகின்) மற்றும் பெற்றோருடனான தொடர்புகள். ஒட்டுமொத்த மதிப்பீடானது ஒவ்வொரு பிள்ளையும் எவ்வாறு முன்னேறியுள்ளார் என்பதை பிரதிபலிக்கும். இம்மதிப்பீடானது பிள்ளைக்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கும் தெரிவிக்கப்படும். பாலர்பாடசாலை ஆசிரியர்கள் வருடத்தில் இரு தடவை பெற்றோருடன் கலந்துரையாடுவர். இரண்டாவது தடவைக்குரிய கலந்துரையாடலை பெற்றோர்கள் விரும்பினால் ஆசிரியரின் அனுமதியுடன் தவிர்த்துக்கொள்ளலாம்.

பெற்றோர் கலந்துரையாடல் இடம்பெற்றதை உறிதிப்படுத்த கலந்துரையாடலின்பின் ஒரு படிவத்தில் கையொப்பமிடுவர். பெற்றோர் கலந்துரையாடலை தவிர்க்கும் சந்தர்ப்பத்திலும் இப்படிவத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இப்படிவங்கள் ஒரு கோப்புறையினுள் (பைலினுள்) பாதுகாக்கப்பட்டு பாலர்பாடசாலை முடிவில் பெற்றோரிடம் கையளிக்கப்படும். இது ஆரம்பப்பாடசாலையில் வழங்கப்படும் மாணவர் தேர்ச்சியறிக்கை போன்றது.

**தாமதமாக நுளைதல்**

ஒரு பிள்ளையின் திறனானது விசேடகல்வியேற்பாட்டு ஒழுங்குகளாலும் சரிசெய்வது கடினம் என தோன்றும் சந்தர்ப்பத்தில் அப்பிள்ளை கட்டாயக்கல்வியை (பாலர்பாடசாலைக்கு செல்லுதல்) தாமதமாக ஆரம்பிக்க வாய்ப்புள்ளது. விதிவிலக்காக, தாமதமாக நுளைதலானது பாடசாலை சென்று கொண்டிருக்கும் போதும் ஏற்பட வாய்ப்புண்டு. இதற்கான விண்ணப்பமானது பெற்றோரூடாகவோ அல்லது ஆசிரியரூடாகவோ சமர்ப்பிக்கப்படலாம். முடிவானது கல்விவலயத்தினால் எடுக்கப்படும். பெற்றோர் கல்விவலய முடிவை ஏற்க மறுக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் மாவட்டசபையிடம் எதிர்ப்புக்கடிதத்தை சமர்ப்பிக்கலாம்.

**முதலாம் வகுப்பிற்கு மாற்றல்**

பாலர் வகுப்பானது பொதுவாக இரண்டு வருடங்களாகும். முதலாம்வகுப்பிற்குரிய மாற்றம் தானாகவே இடம்பெறும். இந்த வகுப்பேற்றமானது பாடத்திட்டத்திலுள்ள அடிப்படைத்தகமைகளை வைத்து இடம்பெறும். பாலர்பாடசாலையில் எவ்வாறான அடிப்படைத்தகமைகள் பயிற்றுவிக்கப்பட்டன என்பதை அவை தெரியப்படுத்தும். முதலாம் வகுப்பிற்கு செல்லுகையில் அனைத்து அடிப்படைத்தகமைகளும் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மாணவ மாணவியர் அடைந்திருக்கவேண்டிய அடிப்படைத்தகமைகள் இரண்டாம் வகுப்பு முடிவடையும் போது தொகுக்கப்படும்.

கற்பதில் பின்னடைவு அல்லது வளர்ச்சியில் பின்னடைவு இருக்கும் சந்தர்ப்பத்தில் மாணவ மாணவி-யருக்கு விசேட ஒழுங்கமைப்புக்கள் அவசியமானதா என்பது பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஆசிரியரும் பெற்றோருமாக சேர்ந்து இவைபற்றி முடிவெடுப்பர். இவ்வாறு முடிவெடுப்பதற்கு „ஆசிரியர்களின் பெற்றோருடனான கலந்துரையாடல்“ முக்கிய கருவியாக அமைகின்றது. இக்கலந்துரையாடலில் கருத்து வேறுபாடுகளிருப்பின் பாடசாலை அதிபர் மற்றும் தேவையேற்படின் வலய அதிபர் அழைக்கப்படுவர். அனைத்து ஆவணங்களும் பரிசீனை செய்யப்பட்ட பின்னர் வலய அதிபர் ஒரு முடிவை எடுப்பார். இம்முடிவும் ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் மாவட்டசபையிடம் எதிர்ப்புக்கடிதத்தை சமர்ப்பிக்கலாம்.

**பாடசாலைக்கு சமூகமளிக்காமை, லீவு மற்றும் ஜோக்கர்நாட்கள்**

பாலர்பாடசாலைக்கு செல்ல வேண்டியது கட்டாயமானது. ஆரம்பப் பாடசாலைக்குரிய விதிமுறைகளான பாடசாலைக்கு சமூகமளிக்காமை, லீவு மற்றும் ஜோக்கர்நாட்கள் போன்றன பாலர்பாடசாலைக்கும் செல்லுபடியாகும். குறிப்பாக சொல்வதானால், உதாரணமாக பிள்ளை சுகயீனம் காரணமாக வீட்டில் தங்க நேர்ந்தால் அதனை வகுப்பாசிரியருக்கு கட்டாயமாக தெரியப்படுத்த வேண்டும்.

பாடசாலைக்கு செல்லமுடியாது என்ற விடயம் முதலே தெரிந்தால் பாடசாலை அதிபரிடம் லீவு கோரலாம். லீவு கோருவதற்கு முக்கிய காரணங்கள் வேண்டும், உதாரணமாக தனிப்பட்ட விசேட நிகழ்வுகள், முக்கிய விடுமுறைகள், சமய சம்பந்தமான விசேட நிகழ்வுகள் அல்லது பிள்ளை வாழும் சுற்றாடலில் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் என்பன. பாடசாலை அதிபர் தனிப்பட்ட, குடும்ப மற்றும் பாடசாலை சம்பந்தமான விடயங்களை கருத்தில் கொண்டு லீவு வழங்க கடமைப்பட்டிருக்கிறார்.

ஒவ்வொரு மாணவ மாணவியருக்கும் ஒரு பாடசாலை வருடத்தில் லீவிற்கு விண்ணப்பிக்காது இரண்டு நாட்கள் ஜோக்கர் நாட்களாக எடுக்க அனுமதியுண்டு. பெற்றோர் இந்த ஜோக்கர்நாட்களை எடுக்க விரும்பினால் அதனை வகுப்பாசிரியரிடம் முற்கூட்டியே அறிவிக்க வேண்டும். ஜோக்கர் நாட்கள் எடுக்காவிடின் அவை காலாவதியாகிவிடும். வகுப்பாசிரியர் மாவட்டசபையின் சரியான விதிமுறைகள் பற்றி பெற்றோருக்கு தெரிவிப்பார்.

**பெற்றோரிற்கான உரிமையும் கடமையும்**

பெற்றோரிற்கான சில உரிமைகளும் கடமைகளும் ஆரம்பப்பாடசாலை விதிமுறைகளில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. சரியான நேரத்தில் பாடசாலை ஒழுங்கமைப்பைப்பற்றி பெற்றோர் தெரிந்து கொள்வதற்கு உரிமையுண்டு. உதாரணமாக பிள்ளைக்கான வகுப்பு பிரித்தல், படிக்குமிடம், பாடநேரம் மற்றும் பாடசாலை நிகழ்ச்சிகள் போன்ற விடயங்கள். பாலர்பாடசாலை நிகழ்வுகள் பற்றி வகுப்பாசிரியர் எப்பொழுதும் சரியான நேரத்தில் தெரியப்படுத்தல் வேண்டும்.

சிலமுக்கியமான சந்தர்ப்பங்களில், உதாரணமாக ஒரு பிள்ளை வழமைக்கு மாறாக நடந்தால், வகுப்பு முன்னேற்றத்தில் பின்னடைவு தெரிந்தால் அல்லது நடத்தையில் வேறுபாடுகள் தெரிந்தால் வகுப்பாசிரியரும் பெற்றோரும் ஒருவரிற்கொருவர் அவற்றை தெரியப்படுத்த வேண்டும்.

பாடசாலையில் தனிப்பட்ட மற்றும் பொதுவான நடைமுறைகளில் பங்குகொள்ள பெற்றோரிற்கு உரிமையுண்டு. உதாரணமாக பாடசாலை வாழ்க்கைப்பாதைபற்றிய தீர்மானம் (முதலாம் வகுப்பிற்கு வகுப்பேற்றல்) விசேட கற்பித்தல் சம்பந்தமான நடைமுறைகள் (ஆசிரியர்களின் பெற்றோருடனான கலந்துரையாடல், உடன்பாட்டுநடைமுறை) அல்லது நல்லொழுக்கம் சம்பந்தமான நடவடிக்கைகள் போன்றவற்றை சேர்ந்து கதைக்க முடியும். மேலும் பெற்றோர் சங்கம் அல்லது பாடசாலை நிகழ்ச்சிகள் போன்ற பொதுவான பங்குபற்றல்களில் சுயமாக தீர்மானிக்கலாம், இவைபற்றிய விடயங்கள் நகரசபையிலிருக்கும் ஒழுங்கமைப்பு சட்டப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

பாலர்பாடசாலைக்கு செல்வது இலவசமானது. வதிவிடத்திலேயே இவ்வுரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு பிள்ளை பகல்வேளைகளில் வதிவிடத்தில் தங்காத சந்தர்ப்பத்தில் உதாரணமாக பகல்வேளை பராமரிப்பு குடும்பத்தில் தங்கியிருந்தால் இவ்வுரிமை அந்த தங்குமிடத்தில் செல்லுபடியாகும். பெற்றோர் முக்கிய காரணங்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில் வேறோரு நகரசபைப்பாடசாலைக்கு செல்வதற்கான மனுவினை வலயக்கல்விக்கு சமர்ப்பிக்கலாம். சம்பந்தப்பட்ட நகரசபை மனுவை பரிசீலனை செய்து முடிவெடுப்பதுடன் பாடசாலைக்கட்டணத்தையும் தீர்மானிக்கும். பாடசாலைக்கு செல்லும் தூரம் அதிகமாகவோ அல்லது ஆபத்து நிறைந்ததாகவோ இருக்கும் சந்தர்ப்பத்தில் இந் நடைமுறையானது சம்பந்தப்பட்ட நகரசபைகளால் தாமாகவே செய்யப்படும்.

ஆரம்பப்பாடசாலை விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடமைகள் பெற்றோருக்கும் மாணவ மாணவியரின் பாதுகாவலரிற்கும் பொருந்தும். அவர்கள் உதாரணமாக பிள்ளைகளை ஒழுங்காகவும் அமைதியாகவும் பாலர்பாடசாலைக்கு அனுப்புவதற்கு பொறுப்பாவர். அதுமட்டமல்லாது அவர்கள் பிள்ளைகளை பாடசாலை வகுப்பு மற்றும் விசேட நிகழ்வுகள் (வெளியில் செல்லுதல்) என்பவற்றிற்கு ஏற்றவாறு பொருட்களை கொடுத்தனுப்புதல் மற்றும் உடையணிதல் போன்றவற்றிற்கும் பொறுப்பாவர்.

**பாடசாலைக்கு செல்லும் பாதை**

பாடசாலைக்கு செல்லும்பாதைக்கு பெற்றோரே பொறுப்பாவர். பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லும் பாதையை போதுமான நாட்கள் பழக்கப்பட்ட பின்னர் தாமாகவே செல்ல முடிதல் வேண்டும். பாட-சாலைத்தூரம் மிக அதிகமாகவோ அல்லது ஆபத்துநிறைந்ததாகவோ அமையும் சந்தர்ப்பத்தில் வலயக்கல்வியானது ஏற்ற நடவடிக்கையை ஒழுங்கு செய்யும். உதாரணமாக வழித்துணைசேவை அல்லது வழிகாட்டிசேவை என்பவற்றை நகரசபை ஏற்பாடு செய்து அதற்குரிய செலவினை பொறுப்பேற்கும்.

**நிலையான மற்றும் வகுப்பு நேரங்கள்**

அனைத்து ஆரம்பப்பாடசாலைக்கும் இந்த நிலையான நேரம் பொருந்தும். முற்பகல் 8 மணி தொடக்கம் 12 மணி வரை வகுப்பு அல்லது இலவசப்பராமரிப்பு ஏற்பாடு செய்வதற்கு நகரசபை பொறுப்பானது. பாடசாலை ஒழுங்கமைப்பு காரணத்தினால் வகுப்பு மற்றும் இலவசபராமரிப்பு ஆகக்கூடியது 20 நிமிடங்களால் குறைக்கப்பட வாய்ப்புள்ளது.

பாலர்பாடசாலையில் குறிப்பிட்ட தொடக்கநேரஇடைவெளிக்குள் செல்லல் ஒரு சிறப்பு அம்சம் ஆகும், இது பிள்ளைகளை தாம் தமக்கேற்ப தனிப்பட்ட நேரத்தில் ஆரம்பிக்க வழிவகுக்கும். இந்த சுயமாக தீர்மானிக்கும் நேர இடைவெளி ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு. வகுப்பாசிரியர் இந்த குறிப்பிட்ட தொடக்கநேரஇடைவெளியை தனியாகவும் மற்றும் குழுவாகவும் ஏற்றவாறு அமைப்பர்.

கட்டாய வகுப்பு நேரங்கள் சூரிச் பாடத்திட்டம் 21 இலுள்ள நேர அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

- முதலாவது பாலர்பாடசாலை: கிழமைக்கு 20 பாடநேரம், நிலையானநேரத்திற்கமைய முற்பகல் வகுப்பு
- இரண்டாவது பாலர்பாடசாலை: கிழமைக்கு 24 பாடநேரம், நிலையானநேரத்திற்கமைய முற்பகல் வகுப்பும் இரண்டு நாட்கள் பிற்பகல் வகுப்பும்.

**நாள் ஒழுங்கமைப்பு**

தேவையேற்படும் சந்தர்ப்பத்தில சுமூகமான பராமரிப்பு ஏற்பாட்டினை நகரசபையிலுள்ள பாடசாலை நிர்வாகம் செய்தல்வேண்டும். இது முற்பகல் (7.30 மணி தொடக்கம்) நிலையான நேரம் ஆரம்பிக்கும் வரை, மதிய நேரம், பிற்பகல் (18 மணி வரை). நிலையான நேரம் தவிர்ந்த நேர பராமரிப்புகளிற்கு பணம் செலுத்தப்பட வேண்டும். குறித்த பராமரிப்புகள் பற்றிய தகவல்களை பெற்றோர் தலைமைக்காரியாலயத்தில் அல்லது வகுப்பாசிரியரிடம் பெற்றுக்கொள்ளலாம்.